அசல் வழக்கு எண் : 13/2025

நாள் : 10.02.2026

வா.சா. : 1

பெயர் : நாராயணசாமி

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் மயிலாடுதுறையில் கூறைநாடு வட்டத்தில் உள்ளது. தாவா சொத்து மயிலாடுதுறை 63 பேட்டையில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் என் மனைவியால் 1980ல் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் உழைப்பால் நான் என் மனைவி பெயரில் வாங்கினேன். வாசாஆ 1 கிரய ஆவணத்தில் என்னால் வாங்கப்பட்டது என்ற விவரம் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். என் மனைவி நகைகளை விற்று அவரே அந்த சொத்தை வாங்கினார் என்றால் சரியல்ல. நான் என் மனைவிக்கு நகை வாங்கி கொடுத்த விவரம் மற்றும் வைப்பீடு செய்து பணத்தை பற்றிய விவரங்களை வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மனைவி மற்றும் மகன்கள் மீது அக்கறை உள்ளதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை தவிர ராஜா என்ற மகன் இருந்தார் அவர் இறந்துவிட்டார். அவர் ஆணியை விழுங்கி இறந்துவிட்டார். அவர் என் கொடுமை தாங்காமல் தற்கொலை செய்துகொண்டார் என்றால் சரியல்ல. என் மனைவி 2023ல் உடல்நலம் சரியில்லாமல் இறந்துவிட்டார். என் கொடுமை தாங்காமல் என் மனைவி தற்கொலை செய்துகொண்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் ஒரு பகுதியை என்மனைவி என் மகன் கோபுவிற்கு தானம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். எந்த

வருடம் கொடுத்தார் என்று நினைவில்லை. 1, 3 பிரதிவாதிகளுக்கும் தாயார் உயிருடன் இருக்கும்போது சொத்தை வாய்மொழியாக கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி கோபு பீரோவை உடைத்து நகை, பத்திரங்களை எடுத்து கொண்டு போனது தொடர்பாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் குடும்பத்தில் பற்றில்லாமல் இருந்ததால் தான் 2ம் பிரதிவாதிக்கு என் மனைவி சொத்தை கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் மகளை 3ம் பிரதிவாதி திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி நிரந்தரமாக சென்னையில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் மகள் மற்றும் 3ம் பிரதிவாதி என்னை நன்றாக பார்த்துக்கொண்டார் என்றால் சரியல்ல. 1998 ம் ஆண்டு முதல் தாவா சொத்து பிரதிவாதிகள் வசம் உள்ளது என்றால் சரியல்ல. அதனடிப்படையில் அவர்களுக்கு சொத்துரிமை கிடைத்து விட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட சொத்து சம்பந்தமாகவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் வழக்குரையில் தவறான சொத்து விவரம் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்ககூடியது இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு எந்த மூலமும் இல்லை என்றால் சரியல்ல.